# காஞ்சிபுரம் பெருநகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2019 – 2020

# காஞ்சிபுரம் பெரு நகராட்சி

# 2019–2020 –ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

காஞ்சிபுரம் பழைமையும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும், புனிதத் தன்மையும் கொண்ட பல கோயில்கள் அமைந்த ஒரு யாத்திரை நகரமாகும். இந்நகர், உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த பட்டுத் துணிகளுக்கு உலகப்புகழ் பெற்றது. இந்நகராட்சி **1.11.1866**–ல் தோற்றுவிக்கப்பட்டது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசு ஆணை எண், 651 நாள் **9.5.1983**–ல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது., **தற்போது அரசாணை எண்.238 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:2.12.08–ல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.**

அரசாணை நிலை **எண்.18,** நகராட்சி நிர்வாகம் மற்றும் **குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 14.1.2011–ன்படி காஞ்சிபுரம் நகராட்சியுடன் அருகாமையில் உள்ள செவிலிமேடு பேரூராட்சி, தேனம்பாக்கம், ஓரிக்கை மற்றும் நத்தப்பேட்டை ஊராட்சிகள் எல்லை விரிவாக்கத்தின்போது சேர்க்கப்பட்டது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு காஞ்சிபுரம் நகராட்சியின் பரப்பளவு 36.14 சதுர கிலோ மீட்டராகும். தற்போது நகராட்சி 51 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.**

1. **<u>அமைப்பும், மேலாட்சியும்.</u>**

**<u>ஆட்சி எல்லை:–</u>**

இந்நகராட்சி பரப்ளவு 36.14 சதுர கிலோ மீட்டர்கள் **ஆகும்.** இந்நகராட்சியின் எல்லையில் அறிக்கை ஆண்டில் யாதொரு மாறுதலும் செய்யப்படவில்லை**.**

2011–ம் ஆண்டு மக்கள் **தொகை** கணக்கெடுப்பின்படி நகராட்சி மக்கள்தொகை 232816.**ஆகும்.**

2. **<u>தனி அலுவலர் நியமனம்</u>**

அரசாணை (பல்வகை) எண். 146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தேர்தல் **துறை நாள். 24.10.2016**–ல் **தனி அலுவலர் நியமனம் செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி அறிக்கையாண்டில் திரு.கா. மகேந்திரன், நகராட்சி பொறியாளர், ஆணையர் பொறுப்பு மற்றும் தனி அலுவலர் பதவியினை 01.04.2019 முதல் 15.07.2019 வரை (ம) 11.10.2019 முதல் 11.11.2019 வரை வகித்து வந்தார். திரு.ப.மு.நெ. முஜிபுர் ரஹ்மான் பி.எஸ்.சி. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கறபட்டு அவர்கள் 16.07.2019 முதல் 10.10.2019 வரை ஆணையாளர் கூடுதல் பொறுப்பு மற்றும் தனி அலுவலர் பதவி வகித்து வந்தார். அதன் பிறகு திருமதி.ரா.மகேஸ்வரி, பி.காம்., அவர்கள் 12.11.2019 முதல் 31.03.2020 வரை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் பதவி வகித்து வந்தார்.**

**அ. நகரமன்ற கூட்டங்கள்**

தனி அலுவலர் தலைமையில் **01.04.2019** முதல் **31.03.2020** வரை அறிக்கையாண்டில் **8** சாதாரணக் கூட்டங்கள் மற்றும் **9** அவசரக் கூட்டங்கள் ஆக மொத்தம் **17** கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை **498** ஆகும்.

**ஆ. நியமனக்குழு கூட்டங்கள்**

அறிக்கையாண்டில் தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நியமனக்குழு குறித்து ஆறு கூட்டங்கள் நடைபெற்றது.

| வ.எண் | நகராட்சி ஆணையாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | திரு.கா.மகேந்திரன்<br>நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ.) | 01.04.2019 | 15.07.2019 |
| 2 | திரு. ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்,(கூ.பொ.)<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு. | 16.07.2019 | 10.10.2019 |
| 3 | திரு.கா.மகேந்திரன்<br>நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ.) | 11.10.2019 | 11.11.2019 |
| 4 | திருமதி. ரா. மகேஸ்வரி,<br>ஆணையாளர் | 12.11.2019 | 31.03.2020 |

<u>மேலாட்சி:–</u>

அறிக்கையாண்டில் நகராட்சி, பணியாளர்களின் சம்பள செலவு ரூ.2940.18 இலட்சம் ஆகும்.

அலுவலர்களையும், பணியாளர்களையும் அமர்த்தல், தண்டித்தல் ஆகியவை பற்றிய பணிவிதிகள் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டன.

**பொறியியல் பிரிவு**

இவ்வறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு நகராட்சி பொறியாளர்கள் பணியாற்றியுள்ளனர்.

| வ.எண் | நகராட்சி பொறியாளர் பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| **1** | திரு.கா. மகேந்திரன் | **01.04.2019** | **31.03.2020** |

பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கு இவ்வாண்டுக்கு ஆன செலவு ரூ.**1,92,59,084.00** சென்ற ஆண்டு ரூ.**2,39,38,085**.00 ஆகும்.

## 1) குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை

காஞ்சிபுரம் நகராட்சியானது 25.10.2011 முதல் செவிலிமேடு பேரூராட்சி, ஓரிக்கை, தேனம்பாக்கம் மற்றும் நத்தப்பேட்டை ஆகிய கிராம ஊராட்சிகளையும் இணைத்து 36.14 சதுர கி.மீ. பரப்பளவும், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2,32,816 மக்கள் தொகை கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கிய பெருநகராட்சியாகும். தற்போதைய மக்கள் தொகை 2,48,685 ஆகும். காஞ்சிபுரம் நகரம் மாவட்ட தலைநகரமாக இருப்பதுடன் பிரசித்தி பெற்ற திருக்கோயில்கள் அதிகமுள்ள கோயில் நகரமாகவும், பட்டு தொழிலுக்கு பிரசித்தி பெற்ற நகரமாகவும் திகழ்கிறது. இந்நகரம் சுற்றுலா தலமாகவும் இருந்து வருகிறது.

காஞ்சிபுரம் நகரில் குடிநீர் விநியோகத்திற்காக பாலாற்று படுகையில் ஓரிக்கை என்ற இடத்திலும், திருப்பாற்கடல் என்ற இடத்திலும் இரண்டு குடிநீர் தலைமை நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டு நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இவைகள் முறையே 1961 மற்றும் 1992 வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. இவைகள் மூலமாக தினமும் சராசரியாக சாதாரண காலங்களில் 21.00 மில்லியன் லிட்டர்கள் குடிநீரும், கோடை காலங்களில் 17.00 மில்லியன் லிட்டர்கள் குடிநீரும் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு தினமும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு முறையே 92 லிட்டர்கள் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் இதுவரை 32110 குடிநீர் வீட்டுஇணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் நகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்தவும் அரசு நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் அளவான நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 135 லிட்டர்கள் என்ற இலக்கினை செயல்படுத்த வேண்டியும் அரசு நிதி உதவியுடன் “குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை” செயல்படுத்துவதற்குன்டான விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயார் செய்ய வேண்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்காக 150 எண்ணிக்கை இந்தியா மார்க் II ஆழ்துளை குழாய் கிணறு கைப்பம்புகளையும், 350 எண்ணிக்கை சிறு மின்விசை மோட்டார் பம்புகளையும் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## 2) <u>சாலைகள் குறித்த விவரம்</u>

இந்நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் மொத்த நீளம் 247.54 கி.மீ. நகராட்சியின் ஊடே செல்லும் மாநில நெடுஞ்சாலை மற்றும் கிராமச்சாலை துறைக்கு சொந்தமான சாலையின் நீளம் 15.50 கி.மீ. ஆகும். நகராட்சியில் 51 வார்டுகளில் 761 தெருக்கள் உள்ளது. அச்சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் 170.69 கி.மீ., தார்சாலையின் மொத்த நீளம் 68.11 கி.மீ. மற்றும் சரளைக்கல் சாலை 1.61 கி.மீ. மற்றும் மண் சாலைகள் 7.13 கி.மீ. ஆகும்.

## 3) <u>தெரு விளக்குகள்</u>

தெருவிளக்கு பராமரிப்பு பணியானது 1989 முதல் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போதுள்ள தெரு விளக்குகளில் மொத்த எண்ணிக்கை 11728 ஆகும். இவற்றில் 24 விழுக்காடு ஆற்றல் சேமிப்பு அடிப்படையில் தானியங்கி நிறுத்தும் பொத்தான் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதான சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இவை நகரில் மொத்த விளக்குகளின் விகிதாச்சார அடிப்படையில் 6 சதவீதமாகும். 60 சதவீதம் குழல் விளக்குகளும் உள்ளது. நகரில் 42 இடங்களில் உயர் கோபுர கொத்து விளக்குகள் முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டு உள்ளது. இவை நாள்தோறும் வந்துபோகும் மக்கள் பயன் அடையும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

2012–ம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்ட சிறப்பு திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட முக்கிய பிரதான கோயில் பகுதிகள், பேருந்து போக்குவரத்து சாலைகள் மற்றும் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளின் முக்கிய சாலைகளில் 1789 எண்ணிக்கை மின்னாற்றல் சேமிப்பு விளக்குகள் ரூ.1606.70 லட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு அரசாணை எண்.580, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.11.2013–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

## 4. <u>திட்டப் பணிகள்</u> :-

### 4.1 <u>தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2017-18</u>

நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2017-18 **–**ன்கீழ் அரசின் பங்குத் தொகையாக ரூ.**120.00** (CGF 48,00 + CFC 72.00) இலட்சம், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.**240.00** (TURIF) இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.**40.00** இலட்சம் ஆக மொத்தம் ரூ.**400.00** லட்சம் மதிப்பீட்டில் ரூ.**200.00** இலட்சம் வீதம் **2** சிப்பங்களாக பிரித்து தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 4.2 <u>தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2018-19</u>

நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2018-19 **–**ன்கீழ் அரசின் பங்குத் தொகையாக ரூ.**180.00** இலட்சம் (CFC/SFC), மாநில அரசின் பங்குத் தொகை ரூ.**360.00** இலட்சம் (TURIP + SFC) ஆக மொத்தம் ரூ.**600.00** லட்சம் மதிப்பீட்டில் ரூ.**200.00** இலட்சம் வீதம் **3** சிப்பங்களாக பிரித்து தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 4.3 <u>தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-20</u>

நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) **2019–20 –**ன்கீழ் அசசின் பங்குத் தொகையாக (SFC/CFC/Land Regularaisation Fund) ரூ.**800.00** இலட்சம், மாநில அரசின் பங்குத் தொகை (TURIP) ரூ.**200.00** இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.**200.00** இலட்சம் ஆக மொத்தம் ரூ.**1200.00** இலட்சம் மதிப்பீட்டில் ரூ.**200.00** இலட்சம் வீதம் **6** சிப்பங்களாக தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதில் **3** சிப்பங்களுக்கான பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 4.4 <u>மத்திய அரசின் புராதன நகர மேம்பாட்டு திட்டம் (HRIDAY)</u>

மத்திய அரசின் புராதன நகர மேம்பாட்டு திட்டம் (HRIDAY) **–**ன்கீழ் ஏகாம்பரநாதர் கோயில், ஸ்ரீ வரதராஜபெருமாள் கோயில் மற்றும் ஸ்ரீ காமாட்சியம்மன் கோயில்களை சுற்றிலும் ரூ.**1527.72** லட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்டவாறு சாலை பணிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு, மத்திய அரசின் அனுமதி எதிர்நோக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **ஏகாம்பரநாதர் கோயிலைச் சுற்றி வளர்ச்சி பணிகள்** | |
| 1 | ஏகாம்பரநாதர் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் தெருக்களை அழகுபடுத்துதல் | 853.23 |
| 2 | ஏகாம்பரநாதர் கோயில் அருகில் பெட்டக அறை, புராதன தானியங்கி மையம், CCTV கட்டுப்பாட்டு அறை மற்றும் உதவி மையம் அமைத்தல் | 15.11 |
| 3 | ஏகாம்பரநாதர் கோயில் அருகில் நவீன கழிப்பிடம் கட்டுதல் | 11.75 |
| 4 | ஏகாம்பரநாதர் கோயில் அருகில் காலணி அலமாரி, குடிநீர் மற்றும் கால் அலம்புதல் இடம் அமைத்தல் | 10.44 |
| 5 | ஏகாம்பரநாதர் கோயில் அருகில் தெருவிளக்குகள் அமைத்தல் | 94.64 |
| 6 | ஏகாம்பரநாதர் கோயில் அருகில் CCTV கேமிரா அமைத்தல் மற்றும் WIFI Connectivity | 4.55 |
| | **வரதராஜ பெருமாள் கோயிலைச் சுற்றி வளர்ச்சி பணிகள்** | |
| 7 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயிலை (விஷ்ணு காஞ்சி) சுற்றியுள்ள சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் தெருக்களை அழகுபடுத்துதல் | 674.49 |
| 8 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் (விஷ்ணு காஞ்சி) அருகில் பெட்டக அறை, புராதன தானியங்கி மையம், CCTV கட்டுப்பாட்டு அறை மற்றும் உதவி மையம் அமைத்தல் | 15.11 |
| 9 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் (விஷ்ணு காஞ்சி) அருகில் நவீன கழிப்பிடம் கட்டுதல் | 11.75 |
| 10 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் (விஷ்ணு காஞ்சி) அருகில் காலணி அலமாரி, குடிநீர் மற்றும் கால் அலம்புதல் இடம் அமைத்தல் | 10.44 |
| 11 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் (விஷ்ணு காஞ்சி) அருகில் தெருவிளக்குகள் அமைத்தல் | 47.52 |
| 12 | ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் (விஷ்ணு காஞ்சி) அருகில் CCTV கேமிரா அமைத்தல் மற்றும் WIFI Connectivity | 4.55 |
| | **காமாட்சியம்மன் கோயிலைச் சுற்றி வளர்ச்சி பணிகள்** | |
| 13 | காமாட்சியம்மன் கோயில் அருகில் பிரசாதம் வழங்கும் அறை, குடிநீர் வசதி, CCTV கட்டுப்பாட்டு அறை மற்றும் உதவி மையம் அமைத்தல். | 14.08 |
| 14 | காமாட்சியம்மன் கோயில் அருகில் காலணி அலமாரி, பொருட்கள் பாதுகாப்பு அறை, கைப்பேசி பாதுகாப்பு அறை பூஜை பொருட்கள் விற்பனை நிலையம் அமைத்தல். | 16.66 |
| 15 | காமாட்சியம்மன் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் தெருக்களை அழகுபடுத்துதல். | 93.72 |
| 16 | காமாட்சியம்மன் கோயில் வடக்கு மாட வீதியில் நிரந்தர தடுப்பு (Permanent Barricading) அமைத்தல். | 0.82 |
| 17 | காமாட்சியம்மன் கோயில் கிழக்கு மாட வீதியில் நிரந்தர தடுப்பு (Permanent Barricading) அமைத்தல். | 0.82 |
| 18 | காமாட்சியம்மன் கோயில் சன்னதி தெரு மற்றும் வடக்கு மாட வீதியில் தலா 6 எண்ணிக்கை தானியங்கி தடுப்பு (Automatic rising bollards) அமைத்தல். | 89.43 |
| 19 | காமாட்சியம்மன் கோயிலைச் சுற்றி 4 எண்ணிக்கை இ–கழிப்பறை (E-Toilet) அமைத்தல். | 25.22 |

### 4.5 தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM- Special Shelter) 2016–17

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் மாவட்டம் அரசு தலைமை பொது மருத்துவமனையில் நோயாளிகளுடன் உடன் வருபவர்கள் தங்குவதற்கான கட்டிடம் கட்டுதல் | 100.00 |

மேற்படி பணிக்கு 26.12.2016 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

## 4.6 சமுதாய சமையற்கூடம் அமைத்தல் (Community Kitchen)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிக்கையின்படி நகராட்சியில் சேகரமாகும் காய்கறி கழிவுகள் மற்றும் (மனிதக் கழிவுகள்) திடக்கழிவுகளை கொண்டு சமையல் எரிவாயு தயாரிக்கப்பட்டு பொது மக்கள் மூலம் சமையல் செய்து எடுத்துச் செல்ல ஏதுவாக உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதி திட்டம் 2015–16–ன் கீழ் சமையற் கூடம் அமைக்க தெரிவித்ததின் அடிப்படையில் காஞ்சிபுரம் பெருநகராட்சியில் திருவீதிப்பள்ளம் இடத்தில் சமையல் எரிவாயு தயாரிக்கும் கூடம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

## 4.7 பூங்கா பராமரிப்பு – அம்ருத் 2015–16

நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்ட இடங்களில் மத்திய அரசின் அம்ருத் திட்டம் 2015–16–ன் கீழ் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.107.00 இலட்சம், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.42.80 இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.64.20 இலட்சம் ஆக மொத்தம் ரூ.214.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைக்கும் பணிகள் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அருணாச்சலம் நகர் பூங்கா | 46.92 |
| 2 | சின்னையன் நகர் பூங்கா | 52.49 |
| 3 | ஜெம் நகர் பூங்கா | 33.99 |
| 4 | ஏழுமலை நகர் பூங்கா | 40.47 |
| 5 | வேதாச்சலம் நகர் பூங்கா | 40.13 |
| | **மொத்தம்** | **214.00** |

## 4.8 அம்ருத் 2016–17

நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்ட இடங்களில் மத்திய அரசின் அம்ருத் திட்டம் 2016–17–ன் கீழ் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.132.00 இலட்சம், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.52.79 இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.79.21 இலட்சம் ஆக மொத்தம் ரூ.264.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைக்கும் பணிகள் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காந்தி நகர் பூங்கா | 45.15 |
| 2 | அதியமான் நகர் நகர் பூங்கா | 43.12 |
| 3 | பாரதிதாசன் நகர் பூங்கா | 47.75 |
| 4 | குருசாமி நகர் பூங்கா | 43.91 |
| 5 | பேராசிரியர் நகர் பூங்கா | 41.6 |
| 6 | வேதாசலம் நகர் பூங்கா | 42.47 |
| | **மொத்தம்** | **264.00** |

## 4.9 அம்ருத் 2017–20

நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்ட இடங்களில் மத்திய அரசின் அம்ருத் திட்டம் 2017–20–ன் கீழ் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.131.040 இலட்சம், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.52.416 இலட்சம் மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை ரூ.78.624 இலட்சம் ஆக மொத்தம் ரூ.262.080 இலட்சம் மதிப்பீட்டில் 5 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைக்கும் பணிகள் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 42–வது வார்டு விஷ்ணு நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 50.816 |
| 2 | 45–வது வார்டு அரசு நகர் பூங்கா மேம்பாடு செய்தல். | 53.316 |
| 3 | 47–வது வார்டு பேராசிரியர் நகர்–1 பூங்கா மேம்பாடு செய்தல். | 51.316 |
| 4 | 47–வது வார்டு பாக்கியலட்சுமி நகர் பூங்கா மேம்பாடு செய்தல். | 48.816 |
| 5 | 43–வது வார்டு ரங்ககிருஷ்ணா நகர் பூங்கா மேம்பாடு செய்தல். | 57.816 |
| | **மொத்தம்** | **262.080** |

## 4.10 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18

2017–18–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.51.42 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கீழ்குறிப்பிட்ட 7 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 7 பணிகளும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 45–வது வார்டு தாயர்குளம் பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைத்தல் | 8.35 |
| 2 | 29–வது வார்டு காந்தி ரோடு பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து சிறு மின்விசை பம்பு அமைத்தல் | 4.50 |
| 3 | சின்ன காஞ்சிபுரம் பி.எம்.எஸ். அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு புதியதாக 50 எண்ணிக்கை நாற்காலியுடன் கூடிய மேஜை சப்ளை செய்தல் | 4.25 |
| 4 | 11–வது வார்டு பாவா தெருவிற்கு புதியதாக தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 14.50 |
| 5 | 4–வது வார்டு பெருமாள் தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து சிறு மின்விசை பம்பு அமைத்தல். | 4.50 |
| 6 | பெரிய காஞ்சிபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பு நிறுவுதல். (Advanced Reverse Osmosis System +Ultra Voilet System 2,000LPH) | 5.89 |
| 7 | காஞ்சிபுரம் நகராட்சி – 21–வது வார்டு, மாவட்ட அரசு மருத்துவமனை எதிர்புறத்தில் நவீன பேருந்து நிழற்குடை அமைத்தல். | 9.43 |
| | **மொத்தம்** | **51.42** |

2018–19–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.87.69 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்ட 12 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 7 பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 5 பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 42–வது வார்டு தேனம்பாக்கம் பகுதியில் புதிய நூலக கட்டிடம் கட்டுதல் | 9.25 |
| 2 | 42–வது வார்டு தேனம்பாக்கம் (அஞ்சூர்) பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுதல் | 8.75 |
| 3 | காஞ்சிபுரம் நகராட்சி 45–வது வார்டு இளமை நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறு மின்விசை பம்பு அமைத்தல் | 5.00 |
| 4 | காஞ்சிபுரம் நகராட்சி 45–வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் ஒத்தவாடை தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறு மின்விசை பம்பு அமைத்தல் | 5.00 |
| 5 | காஞ்சிபுரம் நகராட்சி காஞ்சிபுரம் நகராட்சி 41–வது வார்டு பெரியார் நகர் அருகில் பேருந்து நிழற்குடை அமைத்தல் | 9.43 |
| 6 | காஞ்சிபுரம் நகராட்சி 37–வது வார்டு பச்சையப்பன் மகளிர் கல்லூரி பஸ் நிலையத்தில் பயணியர் நிழற்குடை அமைத்தல் | 9.43 |
| 7 | காஞ்சிபுரம் நகராட்சி 3–வது வார்டு பகுதியில் காரியமேடை கட்டிடம் அமைத்தல் | 5.00 |
| 8 | திருப்பருத்தி குன்றம் டோபி காலனி சுடுகாட்டினை சுற்றிலும் சுற்று சுவர் அமைத்தல். | 2.89 |
| 9 | திருப்பருத்தி குன்றம் சாலையில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய சிறுமின்விசை பம்பு அமைத்தல். | 3.83 |
| 10 | அண்ணா குடியிருப்பு பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 3.22 |

| | | |
|---|---|---|
| 11 | வார்டு எண்.47 விநாயகர் கோயில் தெருவில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 3.22 |
| 12 | காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் வளாகம் உட்புறம் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல். | 22.67 |
| | **மொத்தம்** | **87.69** |

2019–20–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.56.23 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்குறிப்பிட்ட 6 பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்கள்** | **மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.47 அண்ணா குடியிருப்பில் மழைநீர் வடிகால் மற்றும் இரண்டு சிறு பாலங்கள் அமைத்தல். | 1.69 |
| 2 | வார்டு எண்.45 தாயார் குளம் சுடுகாட்டில் நீர்தார் வழிபாட்டு மண்டபம் அமைத்தல் | 22.63 |
| 3 | வார்டு எண்.33 ஆலடி பிள்ளையார் கோயில் தெரு நியாய விலை கடை அமைத்தல். | 8.50 |
| 4 | வார்டு எண்.4 ஆழ்துளை கிணறு அமைத்தல். | 8.50 |
| 5 | வார்டு எண்.12 ஏகாம்பரநாதர் கோயில் சன்னதி தெரு நவீன பேருந்து நிருத்தம் அமைத்தல். | 9.50 |
| 6 | வார்டு எண்.32 விளக்கடி கோயில் தெரு கீரை மண்டபம் சந்திப்பு நவீன பேருந்து நிறுத்தம் அமைத்தல். | 9.50 |
| | **மொத்தம்** | **56.23** |

## 4.11 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19

2018–19–ம் ஆண்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.5.92 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் கீழ்குறிப்பிட்ட ஒரு பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்கள்** | **மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பு (2000 LPH RO System) நிறுவுதல். | 5.92 |

2019–20–ம் ஆண்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.26.89 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் கீழ்குறிப்பிட்ட இரு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்கள்** | **மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | காமராஜர் சாலை (சரஸ்வதி ஜவுளிக்கடை அருகில்) பேருந்து நிழற்குடை அமைத்தல். | 19.89 |
| 2 | கிருஷ்ணன் தெருவில் உயர் மின் கோபுர விளக்கு (6 மீட்டர்) அமைத்தல். | 7.00 |
| | **மொத்தம்** | **26.89** |

## 4.12 மாநில பேரிடர் மேலாண்மை – 2019 வறட்சி நிவாரண நிதி (Hydrological Drought)

மாநில பேரிடர் மேலாண்மை 2019 –ன்கீழ் (Hydrological Drought – 219) வறட்சி நிவாரணத்தின் கீழ் ரூ.124.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் நகரின் முக்கிய பகுதிகளில் 20 ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைதிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் அனைத்தும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 4.13 14–வது நிதிக்கு (14th CFC) 2019–2020

14–வது மத்திய நித்க்குழு (14th CFC) மாண்யம், 2019–2020 –ன் கீழ் தார்சாலைஅமைக்கலாம் ரூ.693.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 49 சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## 4.14 தூய்மை பாரத இயக்கம் 2018–19

காஞ்சிபுரம் நகராட்சியில் நத்தப்பேட்டை உரக்கிடங்கு வளாகத்தில் சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி நிலத்தினை மீட்டெடுக்கும் (Bio Mining Process) பணி ரூ.699.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது

## 4.15 இயக்குதலும் பராமரித்தலும் இடைநிரப்பு நிதி (O & M Gap Filling Fund) 2018–19

இயக்குதலும் பராமரித்தலும் இடைநிரப்பு நிதி (O & M Gap Filling Fund) 2018–19–ன்கீழ் காஞ்சிபுரம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் உள்ள 40 வார்டுகளில் பழுதடைந்துள்ள குழாய்களை புதுப்பித்தல் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகளை உயர்த்தி சரி செய்தல் பணிகள் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுரும் தருவாயில் உள்ளது.

## 4.16 குடிநீர் வீட்டினைப்பு வழங்குதல் திட்டம் (Internal Plumbing Water Supply Scheme)

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் UIDSSMT-REVOLVING FUND திட்டத்தின் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் நோக்குடன் வட்டியில்லா கடனாக ரூ 474.34 இலட்சம் நகராட்சி நிதியில் – 10.66 லட்சமும் ஆக ரூ485.00 இலட்சம் மதிப்பீட்டில் 14000 இணைப்புகள் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய வழி முறைகள் பின்பற்றி இதுவரை 2280 எண்ணம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.மேலும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

## 4.17 புதை வடிகால் வீட்டினைப்பு வழங்குதல் திட்டம் (Internal Plumbing Under Ground Drainage Scheme)

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் புதை வடிகால் செயல்படும் 40–வார்டுகளில், உள்ள விடுப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் புதை வடிகால் வீட்டிணைப்பு வழங்கும் பொருட்டு, ரூ.281.00 இலட்சம் மதிப்பீட்டில் 5261 இணைப்புகள் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயார்செய்யப்பட்டு தற்போது 1526 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது,மேலும் தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது .

## 4.18 காஞ்சிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

காஞ்சிபுரம் பெருநகராட்சியில் தற்பொழுது இயங்கிவரும் பேருந்து நிலையமானது போதுமான வசதி இல்லாமல் பொதுமக்களின் நெரிசல் நிறைந்த பகுதியாக இருந்து வருகிறது. இந்நிலையில் காஞ்சிபுரம் நகராட்சியால், நகராட்சி பகுதிக்கு மிகவும் அருகாமையில் உள்ள கீழ்க்கதிர்பூர் என்ற கிராமத்தில் 10 ஏக்கர் புஞ்சை அனாதீன இடத்தினைத் தேர்வு செய்து புதியதாக பேருந்து நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களால் 12.05.2018 ந் தேதிய ந.க.எண்.15609.2017/ஆ2 எண் உத்திரவில் முன் நுழைவு (Enter upon permission) அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

மேற்படி இடத்தில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்க 02.05.2018 ந் தேதிய நகர மன்றத் தீர்மானம் எண்.27–ன்படி அனுமதி பெற்று அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு அதன் பேரில் அரசானை (Ms) எண்.75 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA-IV) நாள்.24.07.2018 படி ரூ.38.09 கோடி மதிப்பீட்டில் தனியரின் பங்களிப்புடன் (Under PPP Mode DBFOT Basis) புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை (Ms) எண்.9 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV), நாள்.20.01.2020–ல் PPP Mode DBFOT Based முறையில் மேற்படி பேருந்து நிலையப் பணிக்ளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இப்பணிக்கு PPP Mode (DBFOT Basis) அடிப்படையில் அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததாரர்களிடம் RFQ (Request for Qualification) பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 30.01.2020 அன்று இந்து ஆங்கில நாளிதழ் மற்றும் மாலை முரசு தமிழ் நாளிதழ்களில் 09.04.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு விளம்பரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 4.19 காஞ்சிபுரம் அருள்மிகு ஸ்ரீ தேவராஜசுவாமி திருக்கோயில் அத்திவரதர் வைபவத் திருவிழா ஏற்பாடுகள் :–

அருள்மிகு ஸ்ரீ தேவராஜசுவாமி திருக்கோயிலில் 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற உள்ள அருள்மிகு அத்திவரதர் சுவாமி வைபவ திருவிழா 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெறுவதை முன்னிட்டு தமிழ்நாடு, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்து வருகை தரும் பொதுமக்கள் நலன் கருதி தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணிகளுக்கு பொதுசுகாதாரப் பணிகளுக்கு ரூ.440.97 இலட்சமும், பொறியியல் பிரிவு மூலம் மேற்கொள்ளக்கூடிய பணிகளுக்கு ரூ.415.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.855.97 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந.ம.தீ.எண். எண்.2 / 31.05.2021).

அத்திவரதர் வைபவத் திருவிழாவினை முன்னிட்டு நகராட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டிய அடிப்படைவசதி பணிகளுக்கு ரூ.685.60 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டது. ந.ம.தீ.எண்.37 / 28.06.2019. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9552/2019/தி1, நாள்.25.06.2019ல் பொது சுகாதார பணிகளுக்கு ரூ.440.97 இலட்சம், பொறியியல் பிரிவு பணிகளுக்கு ரூ.235.00 இலட்சம் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ந.ம.தீ.எண்.42 / 28.06.2019).

அருள்மிகு அத்திவரதர் வைபவத் திருவிழாவினை முன்னிட்டு விழாவிற்கு வருகைத்தரும் பொது மக்களின் நலன் கருதி தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு முதல் கட்ட நடவடிக்கையாக ரூ.685.06 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந.ம.தீ.எண்.37 / 28.06.2019).

மேலும் மேற்படி அத்திவரதர் வைபவத் திருவிழாவினை காணவரும் பொது மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு பொது மக்களின் நலன் கருதி கூடுதல் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான செலவினங்களை எதிர்கொள்ளும் வகையில் இரண்டாம் கட்டமாக ரூ. 1451.35 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீட கோரி அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந.ம.தீ.எண் எண்.82/19.07.2021).

## 5) <u>சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல்.</u>

### <u>திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் – தனி நபர் கழிப்பிடங்கள் கட்டுதல்</u>

காஞ்சிபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மொத்தம் 4326 வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறிந்து, அவற்றில் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தற்போது திறந்தவெளி மலம் கழிப்பறை இல்லா நகராட்சியாக மாற்றப்பட்டுள்ளது.

**<u>பொது விவரங்கள்</u> :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | : | 2,32,816 |
| 2. | தற்போதைய மக்கள் தொகை | : | 2,48,685 (தோராயமாக) |
| 3. | மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை | : | 51,767 (தோராயமாக) |
| 4. | பரப்பளவு | : | 36.14 |
| 5. | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | : | 51 |
| 6. | மொத்த தெருக்களின் எண்ணிக்கை | : | 884 |
| 7. | நகராட்சி துப்புரவு பணியாளர்கள் | : | 147 |
| 8. | தனியார் துப்புரவு பணியாளர்கள் | : | 120+100 = 220 |
| 9. | திடக்கழிவு சேகரிக்கப்படும் இடத்தின் பரப்பளவு | : | 39.41 ஏக்கர் (நத்தப்பேட்டை கிராமம் சர்வே எண்.484 & 484 B) |

**<u>முதல் நிலை சேகரிப்பு :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | பேட்டரி சைக்கிள் ரிக்ஷா(BOV) | : | 78 |
| 2. | ஆட்டோ (LCV) | : | 16 |
| 3. | டிராக்டர் | : | 0 |
| 4. | டம்பர் பிளேசர் பின்கள் | : | 0 |
| 5. | காம்பேக்டர் பின்கள் | : | 210 |
| 6. | ஹூக் லோடர் பின்கள் | : | 2 |

**<u>இரண்டாம் நிலை சேகரிப்பு :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | டிப்பர் லாரி | : | 1 |
| 2. | மினி டிப்பர் லாரி | : | 4 |
| 3. | காம்பேக்டர் லாரி | : | 7 |
| 4. | டம்பர் பிளேசர் லாரி | : | 1 |
| 5. | ஹூக் லோடர் லாரி | : | 1 |
| 6. | ஜே.சி.பி. | : | 1 |

51 வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் பொருட்களை தனியார் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரித்து அதனை மறுசுழற்சி செய்யும் நபரிடம் விற்பனை செய்து, அதன் தொகையினை உரிய துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றது.

நகராட்சி உரக்கிடங்கில் உலர்கலம் அமைக்கும் பணி, குப்பை பிரிக்கும் பாதுகாப்பு கூடங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி, உரம் தயாரித்து சேமிக்கும் கூடங்கள் அமைக்கும் பணி போன்ற உள்கட்டமைப்பு பணிகளை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகளை பிரித்தெடுக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் 51 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நகர் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி கோரி கோப்பு அனுப்பப்பட்டு, தற்போது தனியார் மூலம் 51 வார்டுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.1 <u>டெங்கு காய்ச்சல் ஒழிப்பு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்</u>

157 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களைக் கொண்டு கீழ்க்கண்ட டெங்கு ஒழிப்பு சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) பைரித்ரம் மருந்தினை பயன்படுத்தி புகை ஒழிப்பு பணி மேற்கொள்ளுதல்
2) விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்.
3) டெங்கு பற்றிய விழிப்புணர்வு பேரணி நடத்துதல் மற்றும் விளம்பர பலகைகள் அமைத்தல்.
4) ஒருங்கிணைந்த துப்புரவு பணி மேற்கொள்ளுதல் மற்றும் கொசு உற்பத்தியாகும் கலன்களை கண்டறிந்து அழித்தல்.
5) டெங்கு விழிப்புணர்வு குறித்து “மருத்துவ முகாம்" நடத்துதல்.
6) டெங்கு குறித்து சிறப்பு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல்.
7) டெங்கு தடுப்பு பணியாளர்கள் மூலம் குழுவாக சென்று டெங்கு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு அடையாள வில்லைகளை ஒட்டுதல்.
8) தினசரி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமணைகளில் காய்ச்சல் காரணமாக பாதிப்படைந்தவர்கள் விவரங்களை சேகரிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## நகராட்சி கழிவுநீர் – புல்பண்ணை

காஞ்சிபுரம் நகரிலிருந்து சுமார் 3.50 கிலோ மீட்டர் தொலைவில் நத்தப்பேட்டை கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட நத்தப்பேட்டை கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் புல் பண்ணை 112 ஏக்கர் நலப்பரப்ப்பல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவற்றில் 86 ஏக்கர் நிலப்பரப்பு நகராட்சிக்கு சொந்தமானதும் 26 ஏக்கர் அரசு குட்டை புறம் போக்கு பகுதியும் அடங்கும். இவற்றில் 26 ஏக்கரில் மூன்று அடுக்குகளைக் கொண்ட கழிவுநீர் சேகரிப்பு மற்றும் ஆவியாதல் முறை மூலம் சுத்திகரிப்பும் செய்யப்பட்டு வருகிறது. கழிவுநீர் புல்பண்ணையில் 39.41 ஏக்கர் நிலபரப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் உரக்கிடங்கு அமைக்க ஒதுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கழிநீர் தேக்க குளத்தில் ஆகாய தாமரை வளர்வதன் மூலம் யானைக்கால் வியாதிக்கு மூலகாரணமான கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்க ஆகாய தாமரையை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதுடன் கொசுக்களை கட்டுபடுத்துவதற்கு மாலத்தியா. 95% பூச்சிகொல்லி புகை இயந்திரம் மூலமாக அவ்வப்போது தூவப்படுகிறது.

## பணிகள்

**பாலங்கள், மதகுகள்:**

இவ்வாண்டு எவ்வித பெரிய வேலையும் செய்யப்படவில்லை.

**பரிசல் துறைமுகங்கள்:**

–––இல்லை–––

**சொந்தக்கட்டிடங்கள்:**

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை அவ்வப்போது தேவையான பரரமரிப்பு வேலைகள் செய்யப்பட்டன.

**நீர்நிலை ஆதாரங்கள்:**

காஞ்சிபுரம் நகரில் 44 நீர்நிலை ஆதாரங்கள் உள்ளன. ஆவை முறையே கோயில் குளங்கள், குட்டைகள், ஏரி மற்றும் கால்வாய்கள் ஆகும்.

**கோயில்குளங்கள்–29**

இவற்றில் தொல்பொருள் ஆய்வு துறையின் கட்டுபாட்டின்கீழ் 2 ம் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ்–27–ம் உள்ளது. மேற்படி நீர்நிலை ஆதாரத்தை பேணிகாக்க வேண்டிய அவசியத்தின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணைக்கு இணங்க குளங்கள் சுகாதாரமான முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>குட்டைகள்–12</u>**

இவைகள் வருவாய் துறை புறம்போக்கு குட்டைகள் என இனம் காணப்பட்டுள்ளது. எனவே குட்டைகள் வருவாய்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இவை நீர்நிலை ஆதாரமாக இருப்பதால் அவற்றை பேணிகாக்க வேண்டிய அவசியத்தின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணைக்கு இணங்க குளங்கள் சுகாதாரமான முறையில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>ஏரி–1</u>**

நகரின் கிழக்கே அல்லாபாத் ஏரி உள்ளது. இது நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மேலும் ஓரிக்கை ஏரியும் நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது.

**<u>கால்வாய்கள்–2</u>**

இவைகள் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இவற்றில் நகரின் மையத்தில் ஓடும் பிரதான மஞ்சள் நீர் கால்வாயை மேம்படுத்த ஜவுளி மைய மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.**366.00** லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பொதுப்பணித்துறையால் மேற்படி திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டது. தேனம்பாக்கம் கால்வாய், ஓரிக்கை கால்வாய் ஆகியவை தூர் வாரி பராமமாக்கப்பட்டு வருகிறது.

**<u>விளக்கு வசதிகள்:</u>**

**09–06–89**ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசு ஆணை எண்.**344**ல் உத்தரவுப்படியும், நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் **27–6–89**ம் தேதிய ந.க.**48665**/H1 எண்ணிட்ட உத்தரவுபடியும், நகராட்சி எல்லைக்குள் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்கும் பொறுப்பை நகராட்யியே நிர்வகிக்க வேண்டும் என உத்தரவிட்டதற்கு இணங்க மின்சார இலாகாவினரிடமிருந்து மின்விளக்குகள் **15–09–90**ல் பராமரிக்கும் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>நகராட்சியால் பராமரிக்கப்படும் மின்விளக்குகளின் எண்ணிக்கை 2019–20</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | சோடியம் மின்விளக்குகள் | – | 2273 |
| 2 | குழல் விளக்குகள் | – | 6090 |
| 3 | உயர்மின் கோபுர கொத்து விளக்கு (42 Nos.) | – | 325 |
| 4 | CFL விளக்குகள் | – | 2020 |
| 5 | LED விளக்குகள் | – | 1020 |
| | மொத்தம் | – | 11728 |

## நீரளிப்பு

## பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

காஞ்சிபுரம் நகராட்சியானது அரசாணை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.11.2008–ல் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சி தற்போது 51 வார்டுகளை உள்ளடக்கியதாகவும் 36.14 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும் 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 232816 மக்கள் தொகை கொண்டதாகவும் உள்ளது.

### பணி அமைப்பும், தன்மையும்:-

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1897–ம் ஆண்டு வேகவதி ஆற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்தது.

நகரில் வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தினந்தோறும் பெறப்பட்டு வந்த குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக்கப்பட வேண்டியநிலை ஏற்பட்டது. காஞ்சிபுரம் நகரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள ஓரிக்கை பாலாற்றிலிருந்து குடிநீர் இறைக்கப்பட்டு பாதுகாப்பட்ட குடிநீர்த்திட்டம் செயலாக்கப்பட்டுவந்தது. இந்த திட்டம் உச்சகால ஆண்டான 1991–ம் ஆண்டின் எதிர்பார்ப்பு மக்கள் தொகையாக 119543க்கு தேவையை கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்டதாகும்.

ஆனால் நகரின் மக்கள் தொகை ஏற்கனவே கணக்கிட்டதற்கு மாறாக 1991–ம் ஆண்டில் 145033ஆக உயர்ந்ததால் குடிநீர் தேவை அதிகரித்து பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை நிவர்த்திசெய்யும் வகையில் புதியதாக குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஒன்று பாலாற்றை மையமாகக்கொண்டு நகரின் மேற்கே 35 கி.மீ. தொலைவில் காவேரிப்பாக்கம், திருப்பாற்கடல் என்னும் இடத்திலிருந்து செயல்படுத்த அரசுக்கு பிரேரணைகள் சமாப்பிக்கப்பட்டது.

நகராட்சி கோரிக்கைக்கு எற்ப இந்நகராட்சிக்கு திருப்பாற்கடல் என்னும் இடத்திலிருந்து (காஞ்சிபுரம் – வேலூர் சாலையில் சுமார் 34 கி.மீ. தொலைவில் காவேரிபாக்கம் அருகில்) குடிநீர் அபிவிருந்தி திட்டம் மூலம் வேகவதி குடிநீர் இணைப்பு நிலையத்திற்கு கொண்டு வந்து விநியோகம் செய்யும் வகையில் சுமார் 18.63 கோடி மதிப்பீட்டில் திட்டம் அரசால் உலக வங்கி நிதி உதவியுடன் அனுமதிக்கப்பட்டது. 1992–ம் ஆண்டில் இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்கண்ட குடிநீர் அவிவிருத்தி திட்டம் 02.07.93 முதல் 14.07.94 வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சோதனை ஓட்டம் மூலம் இயக்கப்பட்டு 15.07.94 முதல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தல் கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் புதியதாக நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு, ஏழு மண்டலங்களாக பிரித்து அதன்மூலம் குடிநீர் நகருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

| | | | கொள்ளளவு (லிட்டர் – லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | உப்பேரிகுளம் | – | 10.00 |
| 2. | ஜவஹர்லால் மார்க்கெட் | – | 20.00 |
| 3. | மண்பம் தெரு | – | 20.00 |
| 4. | யதோத்தகாரி தெரு | – | 20.00 |
| 5. | பட்டாளத் தெரு | – | 8.00 |

மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2001 மற்றும் 2021 –ம் ஆண்டுகளில் 152984 மற்றும் 228000 மக்கள் தொகைக்கு ஏற்ப திட்டமிடப்பட்டு கடந்த 1994 முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

இந்த புதிய திட்டத்தின் மூலம், சினசரி 150 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் திருப்பாற்க்கடலிலிருந்து வேகவதி மூலமும், பாலாற்று ஓரிக்கை நிலைய குடிநீர் இறைப்பான் மூலமும் நீர் இறைக்கப்பட்டு நகரின் எல்லா பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி திட்ட நீரேற்று நிலைலங்களில் 1990–ல் நிறுவப்பட்டு 15 ஆண்டுகள் ஆகி திறன் குறைந்துபோது மோட்டார் பம்புகளுக்கு பதிலாக புதிய மோட்டார் பம்புகள் மாற்றி ஆற்றல் சேமிப்பு செய்யும் பணியை மேற்கொண்டு அபிவிருத்தி செய்ததன் விளைவாக எதிர்வரும் 2019–ம் வருடம் வரையிலான இடைப்பட்ட கால மக்கள் தொகை மற்றும் 2034–ம் வருடம் வரையிலான எதிர்வரும் கால மக்கள் தொகை பெருக்கத்தை கருத்திற்கொண்டு ஏற்கனனவ சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இயக்கப்பட்டு செயல்திறன் குறைந்த நிலையில் உள்ளதை மாற்றி நாள் ஒன்றுக்கு 200 லட்சம் லிட்டர்கள் நீர் இறைக்கும் அளவுள்ள செயல்திறனுடன் மோட்டார் பம்புகள் மற்றும் நவீன தொழில் நுட்பத்துடன் வடிய ஸ்டார்ட்டர்ககள ஆற்ற. சேமிப்பு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட்டு தற்போது 180 லட்சம் லிட்டர்கள் தினசரி குடிநீர் இறைப்பு செய்யப்பட்டு நகரில் எல்லா பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விழாக்காலங்களிலும், பண்டிகை நாட்களிலும் அதிகப்படியான நேரங்களில் தேவைக்கு ஏற்றப்படி குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இதில் முக்கியமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அகற்ற சுகாதாரமான நிலையில் வழங்கும்பொருட்டு நவீன தொழிநுட்பம் கொண்ட சோடியம் ஹைபோ குளோரைட் திரவ குளோரின் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள அளவுகோலின்படி குடிநீர் ஆதாரம் உள்ள இடத்தில் 2.00 PPM என்ற அளவில் இயந்திரம் மூலம் குடிநீர் குழாயிலேயே செலுத்தப்பட்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் 1.00 PPM என்றஅளவிலும் பராமரிக்கப்படுவதுடன் 24 மணி நேரத்தில் எந்த நேரத்திலுமூ எந்த இடத்திலும் சோதனை செய்தாலுமூ குளாரின் கலக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தில் உள்ளது என ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மாவட்ட சோதனைக் கூட்டத்திலும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை சென்னை கிங் இன்ஸ்டிட்யூட் மூலமும் சோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

**குடிநீர் ஆதாரம்:**

நகராட்சி பொதுமக்களின்தேவைக்காக குடிநீர் நகராட்சியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பாற்கடல், 5 கி.மீ. தொலைவில் உள்ள ஓரிக்கை மற்றும் வெங்கடாபுரம் மற்றும் பாலாற்று படுக்கை பகுதிகளிலிருந்து பெறப்படுகிறது.

**குடிநீர் தேவை:**

நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைந்துள்ள பகுதிகளுக்கு 135 லிட்டர் மற்றும் பாாாள சாக்கடை திட்டம் இல்லாத பகுதிகளுக்கு 90 லிட்டர் என்ற அடிப்படையில் நகரட்சியின் தினசரி குடிநீர் தேவை 28.70 MLD ஆகும்.

**குடிநீர் திட்டம்:**

இந்நகராட்சியில் தற்போது திருப்பாற்கடல், ஓரிக்கை மற்றும் வெங்கடாபுரம் திட்டத்தின் மூலம் 15.50 மில்லிலின் லிட்டர் குடிநீரும், உள்ளூர் குடிநீர் ஆதாரங்களின் மூலம் 5.30 மில்லியன் லிட்டர் குடிநீரும் ஆக மொத்தம் 20.80 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 89 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**தற்போதய நிலை**

தற்போது திருப்பாற்கடல் (10.50 MLD) ஓரிக்கை (3.00 MLD) மற்றும் வெங்கடாபுரம் (2.00 MLD) பகுதிகளில் குடிநீர் இருப்பு குறைந்துள்ளதால், சராசரியாக தினசரி 15.50 மில்லியன் லிட்டராக குடிநீர் மட்டும் பெறப்படுகிறது. எனவே இதனை சமாளிக்கும் பொருட்டு பாலாற்று படுக்கையில் அமைந்துள்ள 27 எண்ணிக்கை நீர் உறிஞ்சு கிணறுகள் மற்றும் 40 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலம் 5.30 மில்லியன் லிட்டர் மற்றும் ஆக மொத்தம் 20.80 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறறபபட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 89 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இடைவெயியில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**லாரி மூலம் குடிநீர் விநியோம்**

குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளிலும், மேடான பகுதிக.லும் நகராட்சிக்கு சொந்ந்மான உள்ள 4 எண்ணிக்கையில் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

## குடிநீர் அல்லாத பிற உபயோகங்கள்

மேலும் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு 150 கைப்பம்புகள் மற்றும் 543 சிறுமின் விசை இறைப்பான்கள் மூலம் நீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் முக்கியமாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரானது பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அற்ற சுகாதாரமான நிலையில் வழங்கும்பொருட்டு நவீன தொழில்நுட்பம் கொண்ட சோடியம்ஹைபோ குளோரைட் திரவ குளோரின் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள அளவுகோலின்படி குடிநீர் ஆதாரம் உள்ள இடத்தில் 2.00 PPM என்ற அளவில் இயந்திரம் மூலம் குடிநீர் குழாயிலேயே செலுத்தப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 1.00 PPM என்ற அளவிலும் பகிர்மானக் குழாய் மூலம் கடைசி நிலையில் 0.2 PPM முதல் 0.5 PPM என்ற அளவிலும் பராமரிக்கப்படுவதுடன் 24 மணி நேரத்தில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சோதனை செய்தாலும் குளோரின் கலக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தில் உள்ளது என ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மாவட்ட சோதனைக் கூடத்திலும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை சென்னை கிங் இன்ஸ்டிட்யூட் மூலம் சோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

## உரக்கிடங்கு

உரக்கிடங்கின் விஸ்தீரணம் 39.41 ஏக்கர் உள்ளது. நகரில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்படுகிறது.

பாதாளசாக்கடை திட்டம் அமுலில் உள்ளதால், கழிவுநீர் உரக்கிடங்கு உபயோகப்படுவதில்லை.

2001–ம் வருடத்திய திடக்கழிவு மேலாண்மை விதிகளை பின்பற்றும் வகையில் திடக்கழிவு மேலாண்மை செய்திட நகராட்சிக்கு சொந்தமான நத்தப்பேட்டை கழிவிநீர் புல்பண்ணையில் 39.41 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.76.00 லட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டத்தை நிறவேற்றிட தமிழ்நாடு நகர்புற நிதியம் மற்றும் கட்டமைப்பு மேம்பாடு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளது.

<u>பொது சுகாதாரம்</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 01.04..2019 முதல் 31.03.2020 முடிய **டாக்டர் பி. முத்து** நகர்நல அலுவலராக அறிக்கையாண்டில் பணிபுரிந்து வருகின்றார்.

மேலும் பொது சுகாதாரப்பிரிவில் கீழ்கண்ட பணியாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. துப்புரவு ஆய்வாளர்கள் | .. | 6 |
| 2. துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள் | .. | 17 |
| 3. ஓட்டுநர்கள் | .. | 6 (5 + 1) |
| 4. துலக்குநர்கள் | .. | 1 |
| 5. துப்புரவு பணியாளர்கள் | .. | 147 |
| 6. யானைக்கால் தடுப்புதிட்ட களப்பணியாளர் | .. | – |
| 7. யானைக்கால் தடுப்பு திட்ட துப்புரவு பணியாளர்கள். | .. | 18 |

மேலே குறிப்பிட்ட சிப்பந்திகளுக்காக, இவ்வாண்டு ஏற்பட்ட செலவு ரூ.6.21.04.896—00ஆகும். சென்றாண்டு ஏற்பட்ட மொத்த செலவு **7,69,09,492—00** அறிக்கை ஆண்டில் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருவிழா மற்றும் அருள்மிகு வரதராஜ பெருமாள் ஸ்வாமி திருக்கோயில் திருவிழாவின்போதும் திருப்திகரமாக தீவர துப்புரவுப்பணி (Mass Programe) செய்து நகரை சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்யப்பபட்டது.

**<u>அத்திவரதர் வைபவத் திருவிழா – சுகாதாரப் பணிகள் அறிக்கை :–</u>**

**காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அத்திவரதர் வைபவத் திருவிழா 01.07.2019 முதல் 17.08.2019 வரை சிறப்பாக நடைபெற்றது. அத்திவரதர் வைபவத் திருவிழாவிற்கு சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வருகை புரிந்துள்ளனர். மேலும் 01.08.2019 முதல் 17.08.2019 வரை அத்திவரதர் சயன கோலத்திலிருந்து நின்ற கோலத்திற்கு மாறுவதால் தினசரி 6 இலட்சத்திற்கு மேல் பொதுமக்கள் வருவார்களென எதிர்பார்க்கப்பட்டு, பொதுமக்கள் அதிகமாக உள்ள நிலையினை சமாளிக்க வேண்டி அரசு சிறப்பு அலுவலர், ஆணையர், ஊரக வளர்ச்சித் துறை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் மாவட்ட**

ஆட்சித்தலைவர் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் மக்களின் நலன் கருதி நகரில் ஆங்காங்கே தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும், பொது சுகாதாரம் பணிக்கு தேவையான கிருமி நாசினி, சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், தளவாட பொருட்கள், குப்பை தொட்டிகள், கூடுதல் துப்புரவு வாகனங்கள், கூடுதல் தூய்மை பணியாளர்கள் கொண்டு இத்திருவிழாவிற்கு வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இத்திருவிழாவினை முன்னிட்டு பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான பொருட்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டது.

| வ.எண் | வாங்கப்பட்ட பொருட்களின் விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் | 17.00 |
| 2 | சுண்ணாம்பு பவுடர் | 26.70 |
| 3 | தளவாடப் பொருட்கள் | 66.87 |
| 4 | பாதுகாப்பு உபகரணங்கள் | 6.22 |
| 5 | தளவாடப் பொருட்கள் | 7.65 |
| 6 | Hittachi Hire Purchase | 3.75 |
| 7 | Lemon Grass Oil | 14.00 |
| 8 | EM Solution | 2.00 |
| 9 | Diesel | 3.25 |
| | மொத்தம் | 147.44 |

மேலும் 7 மண்டலங்களில் உள்ள பல்வேறு நகராட்சிகளில் இருந்து சுமார் 1060 பணியாளர்கள் மற்றும் இந்நகராட்சியின் 235 பணியாளர்கள் சேர்ந்து 1295 பேர் சுழற்சி முறையில் பணியாற்றி உள்ளார்கள். பணியாற்றிய அனைவருக்கும் மூன்று வேளை உணவு நகராட்சி மூலம் வழங்கப்பட்டது. மேலும் 48 நாட்களுக்கு பணியாளர்களின் உணவிற்காக நகராட்சியின் மூலம் ரூ.1.00 கோடி செலவிடப்பட்டது. மேலும் அத்திவரதர் வைபத்தில் பணியாற்றிய பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் உத்தரவின் பேரில் மதிப்பூதியம் (Honorarium) தலா ரூ.1000/– வீதம் மொத்த பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. மதிப்பூதிய செலவினமாக ரூ.60.00 இலட்சம் செலவிடப்பட்டது.

# கொரோனா –19 வைரஸ் நோய் தடுப்பு :–

**அறிக்கையாண்டில் மார்ச் –2020 இல் கொரோனா –19 வைரஸ் நோய் பரவுதலை தடுத்தல், ஆரம்பகட்டமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பொது மக்களை தனிமைப்படுத்தும் பணிகளுக்கான நடடிவக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.**

<u>பிறப்பு வீதம், மகப்பேறு உதவியும்:</u>–

இந்நகரில் உள்ள அரசு மற்றும் **தனியார் மருத்துவ மனைகளில் நிகழ்ந்த** பிறப்புகள் 1724 சென்ற ஆண்டு 6064 இவ்வாண்டு பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு 0.69 சென்ற ஆண்டு 23.67 . இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 4 சென்ற ஆண்டு 9.

<u>நகராட்சி தாய் சேய் நலவிடுதி:–</u>

இந்நகராட்சியில் சின்ன காஞ்சிபுரத்தில் ஒரு விடுதியும், பெரிய காஞ்சிபுரத்தில் ஒரு விடுதியும், பிள்ளையார் பாளையத்தில் ஒரு விடுதியும், நாராயணபாளையத்தில் ஒரு விடுதியும், **செவிலிமேடு ஒரு விடுதியும்** ஆக மொத்தம் ஐந்து தாய் சேய் நல விடுதிகள் இருக்கின்றன. தாய்சேய் நல விடுதிகள் ஐந்தும் நகராட்சியின் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதில் மகப்பேறு உதவியாளர் 2 பேரும், ஆயாக்கள் 0 பேரும் பணிபுரிகின்றனர்.

**<u>குழந்தைகள் இறப்பு:-</u>**

2 –மகப்பேறு உதவியாளர்கள் மகப்பேறு எய்துபவர்களை பிரசவத்திற்கு முன் 2629 தடவையும், மகப்பேறு எய்திய பின் 2725 தடவையும் பார்வையிட்டு கவனித்து வந்தனர்.

இவ்வாண்டு மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் சுகாதார **செவிலியர்கள்** பார்த்த மகப்பேறுகளின் எண்ணிக்கை 54 சென்ற ஆண்டு 53

இந்த ஆண்டில் தாய்சேய் நலபிரிவிற்காக செலவு ரூ.2,**21,14,419**–00. சென்ற சென்ற ஆண்டு செலவு ரூ.**31,99,172**–00

<u>குடும்ப கட்டுப்பாடு</u>

இந்நகராட்சியில குடும்பநல திட்டத்தின்கீழ் 2019 –2010 ஆம் ஆணடு 765 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

<u>நகர ஆரம்ப சுகாதார மையங்கள்:–</u>

அரசு ஆணை எண்.190 சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை நாள் 19.9.2002–ன்படி காஞ்சிபுரம் நகராட்சியில் மூன்று நகர ஆரம்ப சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன.

<u>மேற்படி நகர்நலமையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் விவரம்</u>

| வ.எண் | பதவியின் பெயர் | பணியாளர் எண்ணிக்கை | பணியில் உள்ளவர்கள் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர்கள் | 3 | 1 |
| 2 | பொதுசுகாதாரசெவிலியர்கள் | -- | -- |
| 3 | பொதுசுகாதார பார்வையாளர்கள் | 3 | -- |
| 4 | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | -- | -- |
| 5 | பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் | 16 | 16 |
| 6 | பெண் அலுவலக உதவியாளர்கள் | 3 | 2 |

மேற்படி மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்காக ஊதியம் அரசு **ஆணை எண்.136 குடும்ப நலத்துறை நாள் 31–03–2001 ன்படி 66.67% மத்திய அரசு நிதியிலிருந்து வழங்கப் படுகின்றன. 33.33 %சதவீத செலவினம் நகராட்சி மூலம் செலவிடப்படுகிறது.**

இத்திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களின் முக்கிய பணிகள் குடும்ப நல திட்டத்தை ஊக்குவிபபதாகும். இதன்படி நமது நகர எல்லைக்குட்பட்ட மக்களை கணக்கெடுப்பு செய்துஇதில் கருத்தடை செய்து கொள்வதற்கு தகுதி வாய்ந்த தம்பதியர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடும்ப நலம் பற்றிய கருத்துருக்களை எடுத்துக்கூறி நிரந்தர கருத்தடை முறை மற்றும் தற்காலிக கருத்தடை சாதனங்களை பயன்படுத்துமாறு ஊக்குவித்தல் மற்றும் கருவுற்ற பெண்களுக்கு பேறுகால முன், பின் கவனிப்பு மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு தடுப்ப் ஊசி போன்ற பணிகளை செய்வது ஆகும்.

இதன்படி இந்நகராட்சியில் 2019 –2020 ஆண்டிற்கு 687 தாய்மார்களுக்கு குடும்ப நல நிரந்தர முறையாக சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 498 தாய்மார்களுக்கு தற்காலிக முறையாக ஐ.யு.டி. சாதனமும் 210 தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரைகளும், 410 ஆண்களுக்கு (நிரோத்) வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 1880 கருவுற்ற தாய்மார்களை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு இரண ஜன்னி தடுப்பூசி 1860 தாய்மார்களுக்கு போடப்பட்டுள்ளது. இவர்களின் 1721 தாய்மார்களுக்கு பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்காக முத்தடுப்பூசி 1721 குழந்தைகளுக்கும், போலியோ சொட்டு மருந்து (கூடுதš போலியோ உ£பட) 21884 குழந்தைகளுக்கும், தட்டம்மை ஊசி 1740 குழந்தைகளுக்கும், காசநோய் தடுப்பூசி 1721 குழந்தைகளுக்கும்; போடப்பட்டது.

## இறப்பு விகிதம்

### கொள்ளை நோய்களும்,மகப்பேறு நோய்களும்

இந்நகரில் உள்ள இரண்டு மருத்துவ நிலையங்களில் ஏற்பட்ட வெளியூர் மக்களின் இறப்புகள் உட்பட இவ்வாண்டு பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 1740 சென்ற ஆண்டு 15.12 இவ்வவாண்டு இறப்பு விகிதம் 7.51

| நோய் விவரம் | இறப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. காய்ச்சல் | 750 |
| 2.சீதபேதி | -- |
| 3.மூச்சுப்பை நோய்கள் | 798 |
| 4.இதர நோய்கள் | 90 |
| 5.வாந்திபேதி | -- |
| 6.வயிற்று போக்கு | -- |
| 7.தற்கொலை | 44 |
| 8.விபத்துகள் | 53 |
| 9.காசநோய் | 5 |
| மொத்தம் | 1740 |

### வாந்திபேதி

இவ்வாண்டு இந்த நோயினால் வயிற்றுப்போக்கினால் 788 பேர்கள் பாதிக்கப்பட்டனர். இதில் யாரும் இறக்கவில்லை. இந்த நோய் சிகிச்சை செய்ய அரசாங்க மருத்துவ மனையில் தொற்றுநோய் கொட்டகைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### நோயாளிகள்

நகராட்சியால் நடத்தப்படும் **இரண்டு** மருந்தகங்கள் நல்ல முறையில் நடைபெற்று வந்துள்ளன. இவ்வாண்டு மருத்துவ உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 85671 சென்ற ஆணடு 84553

1. **மருத்துவ அலுவலர் – 1**
2. **மருந்தாளுநர் – 2**
3. **பெண் செவிலிய உதவியாளர் – 2**
4. **துப்புரவு பணியாளர் – 1**

**<u>பொதுநலத்துறை ஆட்களின் வாழ்க்கை நிலை</u>**

இந்நகராட்சியில் வாடகையின்றி 33 –வீடுகள் பொதுநலத் துறை ஆட்களுக்கு இருப்புப்பாதை நிலையததின் அருகில் கட்டித்தரப்பட்டுள்ளது. தன்னிறைவு திட்டத்தில் துப்புரவு தொழிலாளர்களுக்கு 24 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டது. வழக்கம்போல் துப்புரவு தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது.. எல்லா அரசுவிடுமுறை நாட்களிலும் **சனி மற்றும் ஞாயிறு கிழமைகளிலும் இவ்வறிக்கை ஆண்டில்** துப்புரவு பணியாளர்களுக்கு பிற்பகல் விடுப்பு வழங்கப்பட்டது.

**<u>நாய் ஒழிப்பு</u>**

**2019–2020** –ம் ஆண்டு **நாய்களை நகராட்சியின் சார்பாக நாய்களைப் பிடித்து கருத்தடை ஊசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.**

அறிக்கையாண்டில் TEMEPHOSE **50%** E.C. 100 லிட்டர் வாங்கி பயன்படுத்தப்பட்டது.

**நகராட்சியின் மூலம் துப்புரவு பணியாளர்கள் சைக்கிள்களில் மேலத்தியன் மருந்து பயன்படுத்தப்பட்டுவருகிறது.** நகராட்சியின் மூலமாக 750 –லிட்டர் Pyrethrum Extract 2% வாங்கி வளர்ந்த கொசுக்களை புகைதெளிப்பான் மூலமாக அழிக்க பயன்படுத்தப் பட்டு வருகிறது.

**<u>துப்புரவு</u>**

தினசரி தெருக்களில் குப்பையும், மணலும் மற்ற கழிவுப்பொருட்களும் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மூலம் எருத்திடலுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

| **வ.எண்** | **வாகனங்களின் விவரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | டம்பர் **பிளேசர்** | 0 |
| 2 | குப்பை லாரி | 1 |
| 3 | மினி லாரி | 4 |
| 4 | டிராக்டர் மற்றும் டிரெய்லர் | 1 |
| 5 | குப்பை வண்டிகள் (BOV) | 78 |
| 6 | ஆட்டோ (LCV) | 16 |
| 7 | Front End Loader (JCB) | 1 |
| 8 | **ஊக் லோடர்** | 1 |
| 9 | **காம்பேக்டர் லாரி** | 7 |

<u>உரக்கிடங்கு</u>

உரக்கிடங்கின் விஸ்தீரணம் 39.41 ஏக்கர் உள்ளது. நகரில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்படுகிறது.

பாதாளசாக்கடை திட்டம் அமுலில் உள்ளதால், கழிவுநீர் உரக்கிடங்கு உபயோகப்படுவதில்லை.

2001ம் வருடத்திய திடக்கழிவு மேலாண்மை விதிகளை பின்பற்றும் வகையில் திடக்கழிவு மேலாண்மை செய்திட நகராட்சிக்கு சொந்தமான நத்தப்பேட்டை கழிவுநீர் புல்பண்ணையில் 39.41 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.76–00 லட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் திட்டத்தை நிறைவேற்றிட தமிழ்நாடு நகர்புற நிதியம் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளது.

## பொது மல அறைகள்

<u>கட்டண கழிப்பிடம்</u>

இந்நகராட்சியில் 13 பொதுமலஅறைகளும், 1 சிறுநீர்கழிப்பிடம் இருந்தது. கீழ்கண்ட இரண்டு நவீன கழிப்பிடங்கள் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| இராஜாஜி சந்தை அருகில் | 1 |
| விளக்கடிகோயில் அருகில் | 1 |

பொது கழிப்பிடங்கள் பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## <u>சத்துணவு திட்டம்</u>

15.09.82ம் தேதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத்திட்டம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்கு சத்துணவ வழங்கப்பட்டு வருகிறது. 26 சத்துணவு மையங்கள் உள்ளன. 1 முல் 10–ம் வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் பயனடைகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு அமைப்பாளர், ஒரு சமையலர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் சத்துணவு பணிகள் நடைபெறுகின்றது. இத்திட்டம் அரசு ஆணைகளின்படி நகராட்சி சமூகநலத்துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தினசரி சராசரியாக 2240 பிள்ளைகள் பயன்பெறுகின்றனர். 28–10–2014 முதல் சத்துணவு மையங்களில் பயன்பெறும் பிள்ளைகளுக்கு **தினமும் மசாலா முட்டையுடன் கலவை சாதமும் தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது.**

## வருவாய் பிரிவு

### <u>சந்தை</u>

இராஜாஜி சந்தை, ஜவஉறர்லா்ல் சந்தை ஆகிய இரண்டு தினசரி சந்தைகளையும், நகராட்சி மீன் சந்தை ஆகியவைகளிலும் கட்டணம் வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு பொதுஏலத்தில் விடப்பட்டதின் மூலம் வருவாய் ரூ.39,21,750/- வரப்பெற்றது. சென்ற ஆண்டு ரூ.24,97,163/- ஆகும்..

இராஜாஜி தினசரி சந்தை மிகவும் 100–ஆண்டுகள் கடந்த பழமை வாய்ந்ததும் பல்வேறு மக்கள் தினமும் வந்து செல்லக்கூடிய சந்தையாகும். மேற்படி சந்தை பழுதடைந்துள்ளதால் அவற்றை புதுப்பித்து கட்டவும் இறைச்சி, மீன் அங்காடிகளுக்கு மலர் மற்றும் கனிகளுக்கு தனித்தனி பிரிவுகள் கொண்டதும் அனைத்து விதமான அங்காடிகளும் ஒரேஇடத்தில் அமையும் விதத்தில் அங்காடிகள், அவைகளுக்கு முறையான பாதைகள், பொருட்களை பதப்படுத்த குளிரூட்டு வசதி ஆகிய வசதிகளுடன் கட்டமைப்பு ஏற்படுத்த மதிப்பீடு ரூ.218–00 **இ**லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்புற நிதியம் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். மேற்படி பணியானது ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது மீன் இறைச்சி அங்காடி மற்றும் நவீன ஆடு அடிக்கும் தொட்டி ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## ஆடு அறுக்கும் தொட்டி

இந்நகராட்சியில் நவீன ஆடுஅறுக்கும் நீர்கூடம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்படி ஆடுதொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை 01.04.2019 முதல் 31.03.2020 வரை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் வருவாய் ரூ.1,48,840.—00 வரப்பெற்றது.

## பேருந்து நிலையம்

இந்நகராட்சி பேருந்து நிலையத்தை முதல்தர பேருந்து நிலையமாக மாற்றுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு ஒருங்கிணைந்த சிறிய மற்றும நடுத்தர நகரஅபிவிருத்தி திட்டத்தின்கீழ் பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் மொத்தம் ரூ.92—00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்ய நகர்ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் 11.06.92ம் தேதிய ந.க. எண். 23125\87\U.P.2 கடித்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

### பணிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1. பேருந்து நிறுத்தும் தளம் | .. | 52 |
| 2..பயணிகள் தங்கும்.இடம் | .. | 2 |
| 3.பேருந்து உட்புறம் கடைகள் | .. | 77 |
| 4.கழிவறைகள் | .. | 2 |
| 5.சிறுநீர் கழிக்கும் இடம் | .. | 2 |
| 6.பேருந்து உட்புற சாலைகள் | .. | 3 |

மேற்படி திட்டம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப் பட்டது. மேற்படி கட்டப்பட்ட கடைகள் மூலம் வருவாய் பின்வருமாறு.

**பேருந்துநிலையம் 2019—2020**

| | | | |
|---|---|---|---|
| 1 | பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | .... | 1690500.00 |
| 2 | பேருந்து நிலைய தென்புறம் மிதிவண்டிஉரிமை | .... | **712500.00** |
| 3 | பேருந்துநிலைய மிதிவண்டிநிலைய உரிமை | .... | **1096990.00** |
| 4 | பேருந்துநிலைய ஒலிபெருக்கி உரிமை | .... | 394275.00 |
| 5 | பேருந்துநிலைய நுழைவுவாயில் கடை | .... | - |
| 6 | இரும்பு பங்க் | .... | - |
| 7 | பேருந்து நிலைய ஓட்டல் உரிமை | .... | - |
| 8 | பேருந்துநிலைய குடிநீர்தேக்கத்தொட்டி அருகிலுள்ளகடை | .... | - |
| 9 | பேருந்துநிலைய IDSMT புதிய கடை மூலம் வருமானம் | .... | - |
| 10 | இராஜாஜி சந்தை தினசரி மார்க்கெட் | .... | 3643500.00 |
| 11 | ஜவகர்லால் நேரு சந்தை | .... | 278250.00 |
| 12 | கோவில்களில் வண்டிகள்பார்க்கிங் | .... | - |
| 13 | ராஜாஜி மார்க்கெட் மிதிவண்டி உரிமை | .... | **247800.00** |
| 14 | காந்தி ரோடு பகுத்தறிவு வண்டிபார்க்கிங் | .... | **—** |
| 15 | விளக்கடி கோயில் கழிப்பிடம் | .... | 283500.00 |

## பூங்காக்கள்

இந்நகராட்சியில பகுதியில் 21 பூங்காக்கள் தொடர்ந்து பராமரிக்கப்படுகின்றன.

**கச்சபேஸ்வரர் நகர் அண்ணா நூற்றாண்டு பூங்கா, வைகுண்ட பெருமாள் கோயில் தெரு மற்றும் கே.எம்.ஜி. நகர் பூங்காக்கள் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் AMRUT திட்டத்தின் 16 பூங்காக்கள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.**

## கட்டிட உரிமம்

**அறிக்கை ஆண்டில் 428 கட்டிட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.**

## அளவுகடப்புகள்

புதியதாக ஏற்படும் அளவு கடப்புகளை அவ்வப்போது அகற்றப்பட்டன. ஆண்டு முடிய ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

# பொது வருமானம்

வரி விகிதங்கள்
சொத்து வரி — அரையாண்டு வீதம் ஆண்டு வாடகை

மதிப்பின்பேரில்

1. பொது – 8.33%
2. குடிநீர் **விநியோகம் மற்றும்** புதை வடிகால் – 6.00**%**
3. **கல்வி – 2.50%**
4. **நூலக வரி – 1.43%**

மொத்தம் **– 18.26%**

கட்டிடத்தோடு சேராத காலிமனை வரிவீதம் அரையாண்டு வீதம்–– காலிமனை நிலமதிப்பின் பேரில்––60 பைசா,**50 பைசா,40 பைசா**

## சொத்துவரி

காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 2019 –2020 மொத்த சொத்து வரி விதிப்புகள் 50958 ஆகும். அதன் கேட்பு ரூ.825.24 லட்சமாகும்.

## குடிநீர்

| | | |
|---|---|---|
| மொத்த வரிவிதிப்புகள் | .. | 32110 |
| மொத்த கேட்புத் தொகை | .. | ரூ.**202.96** லட்சம் |

## புதைவடிகால் திட்டம்

| | | |
|---|---|---|
| மொத்த வரிவிதிப்புகள | .. | **19414** |
| மொத்த கேட்புத்தொகை | .. | ரூ.822.50 லட்சம் |

## தொழில்வரி

தொழில் வரி நுண்ணறிவுத்திறன் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரி விகிதங்கள் தமிழ்நாடு: தொழில் வரி சட்டம் 9/94-ன் படியும் மற்றும் 12/95ன்படியும் வெளியிடப்பட்ட அட்டவணைப் படி வசூலிக்கப்படுகின்றன. 12.1.1999–ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.11–ன்படி 1.10.2018 முதல் தொழில்வரி விகிதங்களை 30சதவீதம் உயர்வு செய்து திருத்தி அமைக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மொத்த வரிவிதிப்புகள | .. | 4466 |
| மொத்த கேட்புத்தொகை | .. | ரூ.203.14 இலட்சம் |

## வழக்குகள்

2019–2020–ம் ஆண்டில் சொத்துவரி சம்பந்தமாக 123 வழக்குகள் உள்ளது. வழக்குகள் மூலம் நிலுவைத் தொகை ரூ.12.90 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

## தணிக்கைத் தடைகள்:–

2019–2020–ம் ஆண்டின் ஆரம்பத்தில் 690 தணிக்கை தடைகள் இருந்தது. 69 தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது.

## நிதி நிலைமை:–

இந்நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றில் இவ்வாண்டு வருமானம் ரூ.6098.42 இலட்சம் மற்றும் செலவினம் ரூ.5922.48 இலட்சமாகும்.

## கடன்கள்:–

கடன்களுக்கு அசல் மற்றும் வட்டியுடன் திருப்பிச்செலுத்தும் வகையில் ரூ.4825536.00 செலுத்தப்பட்டுள்ளது.

**II. SCHEME FOR URBEN STREET VENDOR (SUSV) :–**

1. **காஞ்சிபுரம் மாநகராட்சியில் தேசிய நகர் புற வாழ்வாதார திட்டத்தில் (NULM) Scheme for Urban Street Vendor என்ற திட்டநிதி கணக்கு துவக்கப்பட்டு நடைமுறையில் இருந்துவருகிறது.**

**நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோரம் வியாபாரிகள் விபரம் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மொத்த பயனாளிகள் 711 நபர்களுக்கு நகராட்சியின் மூலம் வியாபார அடையாள வழங்கப்பட்டு உள்ளது.**

## தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) :–

**காஞ்சிபுரம் மாநகராட்சியில் சொர்ண ஜெயந்தி திட்டம் (SJSRY) 2014–2015 முடிவடைந்து 12.11.2015 முதல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) என்ற திட்டம் துவக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.**

## II SHELTER FOR URBAN HOMELESS :-

1) **(SUH)**

காஞ்சிபுரம் மாநகராட்சியில் NULM திட்டத்தில் (SUH) பஞ்சுப்பேட்டை பெரிய தெருவில் நகராட்சியில் சாலை ஓரம் துயில்பவர்களுக்கான தங்கும் விடுதி கட்டிடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு 2017 முதுல் நடைமுறையில் உள்ளது. இதில் மொத்த 75 பயனாளிகள் உள்ளனர். நிரந்தரமாக 45 பயனாளிகள் தங்கி பயன் அடைகிறார்கள். நகராட்சிக்கு அரசின் மூலம் (O & M ) நிதி மான்யம் பெற்று நாளந்தா கல்வி அறக்கட்டளை மூலம் பராமரிக்கப்பட்டுவருகிறது. அறிக்கையாண்டில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் (O & M) நிதி ரூ.7.50 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

2) **Special Shelter**

மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனையில் நோயாளிகளுடன் வருபவர்கள் சிறப்பு தங்கும் விடுதி கட்டிடம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு " நவம்பர் -2019" முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இச்சிறப்பு தங்கும் விடுதி கட்டிடம் New Spring Charitable Trust, காஞ்சிபுரம் என்ற நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் அரசு தலைமை மருத்துவமனை சிறப்பு கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீட்டு தொகையில் 2-வது தவணை பட்டியல் தொகை ரூ.34,39,840/- செலவிடப்பட்டுள்ளது.

## மின் ஆளுமை

நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்-II ன்கீழ் நகராட்சியில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நகராட்சியில் புதிய மென்பொருள் மூலம் நகராட்சியின் சேவைகள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள், புதிய கணக்குமுறை, கட்டிட அனுமதி, வரவு செலவு கணக்குகள் ஆகியவைகள் கணினியில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் இணையதளம்மூலம் பொதுமக்கள் தாங்களுக்கு தேவையான பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் கணினியில் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் மற்றும் பொதுமக்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தங்களது சொத்துவரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணங்களை இணையதளம் மூலம் செலுத்தலாம். அனைத்து பிரிவிற்க்கு இணைய தள வசதியுடன் கணினி வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் பொதுமக்களின் நலன் கருதி கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் கீழ்கண்ட நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் கணினி மூலம் வரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(1) நகராட்சி அலுவலகத்திலும் (2)சின்ன காஞ்சிபுரம் – தாய்சேய்நலவிடுதி (3)பெரிய காஞ்சிபுரம் – கிருஷ்ணன் தெருவிலும் வசூல் மையம் மற்றும் (4) எல்லப்பன் நகர், செவிலிமேடு பகுதி வரி வசூல் கணினி சேவை மையம் துவங்கப்பட்டு சொத்துவரி, குடிநீர் கட்டணம், புதை வடிகால் கட்டணம் மற்றும் தொழில்வரி வரியில்லா இனங்கள் மற்றும் புதை வடிகால் வைப்பு தொகை ஆகிய வரியினங்கள் மற்றும் அபாயகரமானதும் அருவறுக்கத்ததுமான (D&O) தொழில்களுக்கான கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கட்டிட அனுமதி, பணியாளர் சம்பளம், வழங்குதல் மற்றும் நகராட்சி கணக்குகள் புதிய மென்பொருள் மூலம் இணையதளம் வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## <u>பொது</u>

அறிக்கையாண்டில் காஞ்சிபுரம் நகர வரி செலுத்துபவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள், நகராட்சி நிதிக்கு ஏற்பவும், இதர திட்டங்கள் வாயிலாகவும், தரமான சாலை வசதி, தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, வடிகால் வசதி, மழைநீர் சேமிப்பு வசதி செய்யப்படுவதுடன் ஆண்டுதோறும் சிறப்பான முறையில் மேற்படி வசதிகளை செய்து மக்கள் பயன்அடைய வேண்டும் என்ற குறிக்கோள் கடைபிடிக்கப்பட்டு நகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. நிர்வாகத்தில் நல் ஒத்துழைப்பு நல்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களுக்கு நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் பிரிவு அலுவலர்கள் ஆகிய நகராட்சி பொறியாளர், நகர்நல அலுவலர், நகரமைப்பு அலுவலர், மேலாளர், வருவாய் அலுவலர், மற்றும் அனைத்து அகப்பணியாளர் மற்றும் புறப் பணியாளர்கள் அனைவருக்கும் நிர்வாகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| **நகராட்சி அலுவலகம்,** | **இணை இயக்குநர் / ஆணையாளர்.** |
| **காஞ்சிபுரம்.** | **காஞ்சிபுரம் மாநகராட்சி** |